**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்**
எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை – 600 032
தொலைபேசி 044–22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032
**முன்னிலை : மு. மாலிக் பெரோஸ்கான், இ.ஆ.ப (ஓ)**

**ஆணை எண்: 203 /பேரூ/2022**
**நாள்: 29.11.2022**

திரு.R. மயில்சாமி,
மதுரை. ... முறையீட்டு மனுதாரர்

செயல் அலுவலர்,
பரவை தேர்வுநிலை பேரூராட்சி,
மதுரை மாவட்டம். ... எதிர்மனுதாரர்

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி,செம்பருத்தி நகர்,அய்யப்பன் எண்.5ல் வசிக்கும் திரு R. மயில்சாமி என்பவரின் 20.10.2022 நாளிட்ட மனு இம்முறைமன்ற நடுவத்தில் 07.11.2022-ல் பெறப்பட்டு 203/பேரூ/2022 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை மாவட்டம், புதுவிளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் எண்.5ல் வசிக்கும் திரு. R. மயில்சாமி என்பவர் தனது முறையீட்டு மனுவில், கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்:

"மதுரை மாவட்டம் வடக்கு தாலுகா பரவை பேரூராட்சியில் கற்பகம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி இயங்கி வருகிறது. இப்பள்ளி நகர் ஊரமைப்பத்துறையில் முறையான அனுமதி பெறவில்லை. பள்ளிக் கட்டிடம், கட்டட அனுமதிக்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளது. கற்பகம் மேல்நிலைப்பள்ளி ஸ்ரீமீனாட்சி அம்மன் திருக்கோவிலின் இடத்தை முறைகேடாக ஆக்கிரமிப்பு செய்து உள்ளார்.கட்டிடங்களின் அளவை குறைத்து சொத்துவரி செலுத்துவதினால் பேரூராட்சிக்கு பெரும் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ள இப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களுக்கு தொழிலாளர்வரி மற்றும் தொழில்வரி முறையாக செலுத்தாதனால் வருவாய் இழப்பு பேரூராட்சி ஏற்பட்டு இருக்கிறது. கற்பகம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி பள்ளி குழந்தைகள், ஆசிரியர்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கான கட்டிடம் என்பதால் 1973–ம் ஆண்டைய தமிழ்நாடு நகர் ஊரமைப்புச் சட்டம் பிரிவு 33–ன் படி கட்டிடத்திற்கு நகர் மற்றும் ஊரமைப்பு திட்ட இயக்கத்தின் (Directorate of town and country planning)படி ஒப்புதல் பெறவில்லை. மேலும் குழந்தைகள் ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தக்கூடிய இடம் என்பதால் தமிழ்நாடு பொது

கட்டிடங்கள் (உரிமம்) சட்டம் 1965 பிரிவு 2(8)படி (Section 2 (8) of the Tamilnadu Public Buildings (Licensing Act 1965)ன் படி முறையாக உரிமம் பெற்று முறைப்படி அவ்வப்போது புதுப்பிப்பதும் அவசியமாகும். ஆனால் பள்ளி நிர்வாகம் அனுமதி பெறவில்லை. பள்ளிக் குழந்தைகள், ஆசிரியர்கள் மற்றும் பொதுமக்கள் பயன்படுத்தும் கட்டிடம் என்பதால் வருவாய் துறையின் முன் அனுமதி பெறவில்லை, நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவு 49–ன்படி தேவைப்படும் அனுமதிக்கு மாறாக இக்கட்டிடம் கட்டப்பட்டுள்ளது.

எனவே மேற்படி கற்பகம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஸ்ரீமீனாட்சி அம்மன் திருக்கோவிலின் இடத்தை ஆக்கிரமித்தும், கட்டிட அனுமதிக்கு புறம்பாக கட்டிடம், கட்டியும் சொத்துவரி, தொழில்வரி செலுத்துவதில் பேரூராட்சிக்கு வருவாய் இழப்பீடு செய்தும், உரிய துறைகளில் முறையாக அனுமதி பெறாமலும் சட்டத்துக்கு புறம்பாக செயல்படும் பரவை கற்பகம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியை நகர் ஊரமைப்புச் சட்டம் 1971ன் பிரிவுகள் 56 மற்றும் 57ன் கீழ் கட்டிட வளாகத்தை பூட்டுதல் மற்றும் முதத்திரையிட்டும் (Lock and seal prosecution) மற்றும் அமலாக்க நடவடிக்கையும் மேற்கொண்டு விரைவாக இப்பள்ளி கட்டிடத்தை சீல்வைக்க வேண்டும் என்று வேண்டிக் கொள்கிறேன்.

**முறையீட்டு மனுதாரரின் புகார் மனு மீதான விரிவான அறிக்கையை அனுப்பக்கோரி பரவை தேர்வுநிலை பேரூராட்சி செயல் அலுவலருக்கு இம்முறைமன்ற நடுவ 09.11.2022 நாளிட்ட கடிதம் அனுப்பப்பட்டது.**

**3)மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரர் ஆகியோர் இம்முறைமன்ற நடுவ அழைப்பாணைகள் மூலம் 22.11.2022 அன்று நேரடி விசாரணைக்கு அழைக்கப்பட்டனர்.**

**4) மனுதாரர் 22.11.2022 அன்றைய நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை சமர்ப்பித்துள்ளார்.**

> "மதுரை மாவட்டம் வடக்கு தாலுகா பரவை பேரூராட்சியில் கற்பகம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. மீனாட்சி அம்மன் திருக்கோவிலுக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமித்து பள்ளிக் கட்டடம் கட்டியுள்ளனர். அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள இப்பள்ளிக் கட்டடத்திற்கு முறையாக தமிழ்நாடு பொது கட்டிடங்கள் (உரிமம்) சட்டம் 1965 பிரிவு 2(8)ன்படி முறையாக உரிமத்தை புதுப்பிப்பதில்லை. இப்பள்ளியில் பணியாற்றும் ஆசிரியர்கள் மற்றும் பணியாளர்களுக்கான தொழில் வரி முறையாக செலுத்தப்படுவதில்லை. மேலும் அப்பள்ளியின் கட்டட அளவைக் குறைத்து காண்பித்து சொத்து வரி செலுத்தப்படுவதால், பேரூராட்சி பெரும் வருவாய் இழப்பு ஏற்படுகிறது.
> எனவே, மீனாட்சி அம்மன் திருக்கோவிலுக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமிப்பு செய்து கட்டப்பட்டுள்ள இப்பள்ளியை சரியான சொத்து வரி, தொழில் வரி மற்றும் முறையான உரிமத்தை பிறப்பிக்காத காரணத்தால் அப்பள்ளியை Lock and Seal செய்திட தேவையான நடவடிக்கை எடுக்கும்படி இம்முறை மன்றத்தை கேட்டுக்கொள்கிறேன்" என தெரிவித்துள்ளார்.

**5) பரவை தேர்வுநிலை பேரூராட்சியின் செயல் அலுவலர் தனது 22.11.2022 அன்று நேரடி விசாரணையில் ஆஜராகி கீழ்க்கண்டவாறு தனது வாக்குமூலத்தை பதிவு செய்தார் :**

மதுரை மாவட்டம் , பரவை பேரூராட்சியில் கற்பகம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி இயங்கி வருகிறது. அப்பள்ளி இந்து அறநிலையத்துறைக்கு சொந்தமான இடத்தில்

அமைந்துள்ளது. கட்டட வரைபட அனுமதி பெற்று 2012ம் ஆண்டில் கட்டப்பட்டுள்ளது. மீனாட்சி அம்மன் திருக்கோவிலுக்கு சொந்தமான இடத்தை ஆக்கிரமித்து கட்டப்பட்டுள்ள இப்பள்ளிக் கட்டடத்திற்கு இதுவரை சொத்து வரி விதிக்கப்படவில்லை. சொத்துவரி தற்போது நிர்ணயம் செய்யப்பட்டு அப்பள்ளி நிர்வாகத்திற்கு நோட்டீஸ் அனுப்பப்பட்டுள்ளது என்கின்ற விவரத்தையும், மேலும் அப்பள்ளியில் பணியாற்றும் பணியாளர்களுக்கான தொழில் வரியை வசூல் செய்திடவும் பேரூராட்சியால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்கின்ற விவரத்தையும் இம்முறை மன்றத்தில் தெரிவித்துக்கொள்கிறோம்.

**மேற்கண்ட புகார் மனுவின் மீதான அறிக்கையை அனுப்புமாறு பரவை பேரூராட்சி செயல் அலுவலரிடம் கோரப்பட்டது. அவர், தனது 21.11.2022 நாளிட்ட அறிக்கையில்:-**

மதுரை மாவட்டம், பரவை தேர்வுநிலை பேரூராட்சி, கற்பகம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் நகர் ஊரமைப்புதுறையில் கட்டிடவரைபட அனுமதி பெறாமலும், கட்டிடங்களின் அளவை குறைத்து சொத்துவரி செலுத்துவதினால் பேரூராட்சிக்கு பெரும் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளதாகவும், இப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களுக்கு தொழில்வரி செலுத்தவில்லையென்றும் திரு. மயில்சாமி என்பவரால் புகார் மனு வழங்கப்பட்டுள்ளது. அதன்படி, தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம் சென்னையில் 22.11.2022ல் தேதி நேரில் ஆஜராக உத்தரவிடப்பட்டுள்ளது. அதன்படி திரு ஆர்.மயில்சாமி என்பவரது புகார் மனு மீதான எனது அறிக்கையினை கீழ்கண்டவாறு பணிவுடன் சமர்ப்பித்துக் கொள்கிறேன்.

அரசிதழ் எண்.33, நாள் 25.10.2018 கடிதத்தின்படி பள்ளிகளுக்கு சொத்துவரி நிர்ணயம் செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும் அந்த நிறுவனத்திற்கு கட்டிட வரைபட அனுமதியும் 238/2011–2012, நாள் 13.03.2012ல் அனுமதி பெறப்பட்டுள்ளது. சொத்துவரி நிர்ணயம் செய்யப்படாமல் உள்ளது. 2022–2023ம் ஆண்டு சொத்து வரி சீராய்வின் போது அளவீடு செய்து சேர்க்கப்பட்டுள்ளது. 2015–2016 முதல் 2022 – 2023 வரை சொத்துவரி செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஏனவே கீழ்கண்ட விபரப்படி தரைத்தளம், முதல் தளம், இரண்டாம் தளத்திற்கு சொத்து வரி செலுத்தப்பட வேண்டும்.

| வருடம் | (தரைத்தளம்) சதுர அடி | தொகை |
|---|---|---|
| 2015–2016 | 3316 | 16852 |
| 2016–2017 | 3316 | 16852 |
| 2017–2018 | 3316 | 16852 |
| 2018–2019 | 3316 | 16852 |
| 2020–2021 | 3316 | 16852 |
| 2021–2022 | 3316 | 16852 |
| 2022–2023 | 3316 | 33704 |
| | மொத்தம் | 151668 |

| வருடம் | (முதல் தரைத்தளம்) சதுர அடி | தொகை |
|---|---|---|
| 2015–2016 | 3316 | 16852 |
| 2016–2017 | 3316 | 16852 |
| 2017–2018 | 3316 | 16852 |
| 2018–2019 | 3316 | 16852 |
| 2020–2021 | 3316 | 16852 |
| 2021–2022 | 3316 | 16852 |
| 2022–2023 | 3316 | 33704 |
| | மொத்தம் | 151668 |

| வருடம் | (இரண்டாம் தரைத்தளம்) சதுர அடி | தொகை |
|---|---|---|
| 2015–2016 | 3316 | 18356 |
| 2016–2017 | 3316 | 18356 |
| 2017–2018 | 3316 | 18356 |
| 2018–2019 | 3316 | 18356 |
| 2020–2021 | 3316 | 18356 |
| 2021–2022 | 3316 | 18356 |
| 2022–2023 | 3316 | 36712 |
| | மொத்தம் | 165204 |

மேலும், கட்டிட வரைபட அனுமதியின்படி தரைத்தளம் ரூ.1,51,668/– முதல் தளம் ரூ.1,51,668/– இரண்டாம் தளம் ரூ.1,65,204/– ஆக மொத்தம் ரூ.3,32,540 செலுத்துமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. மேற்படி பள்ளியானது கற்பகம் அறக்கட்டளை மூலம் மேற்படி உறுப்பினர்களால் நடத்தப்படும் பள்ளியாகும். மேலும், கூடுதல் கட்டிடங்களுக்கு கட்டிட அனுமதி DTCP அனுமதி பெற்று அதற்கான அனுமதி வழங்க வேண்டி சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு நடவடிக்கை எடுக்க தெரிவிக்கப்படுகிறது. மேற்படி பள்ளி அறக்கட்டளை சார்பாக Urban land Tax மூலம் வரி விலக்கு அளிக்குமாறு கேட்டுள்ளார். அரசிதழ் எண்.33 நாள் 25.01.2018ன்படி சொத்துவரி மற்றும் தொழில்வரி அதனடிப்படையில் செலுத்துமாறு கற்பகம் மெட்ரிக்லேசன் பள்ளி செலுத்தப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. Commissioner of Land Admission, சேப்பாக்கம், சென்னை அவர்களின் கடிதத்தில் மீனாட்சி அம்மன் கோவில் இந்து அறக்கட்டளைக்கும். கற்பகம் மெட்ரிக் பள்ளிக்கும் வழக்கு நடைபெற்று கொண்டிருக்கிறது. இவ்வழக்கு 09.11.2022 காலை 11.00 மணிக்கு வழக்கு நடைபெற்றது என்ற விபரம் பணிந்து சமர்ப்க்கப்படுகிறது. எனவே திரு. ஆர்.மயில்சாமி என்பவரது புகார் மனுவின் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது என்ற விபரத்தினை பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது என தெரிவித்துள்ளார்.

**மனுதாரரின் மனு மற்றும் வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரரின் அறிக்கை மற்றும் வாக்குமூலம் ஆகியவற்றின் அடிப்படையில் கீழ்கண்ட விபரங்கள் கண்டறியப்பட்டன**

மனுதாரர் தனது புகார் மனுவில் மதுரை மாவட்டம், பரவை பேரூராட்சியில் கற்பகம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி ஸ்ரீமீனாட்சி அம்மன் திருக்கோவிலின் இடத்தை முறைகேடாக ஆக்கிரமிப்பு செய்துள்ளார்.அனுமதிக்கு மாறாக கட்டப்பட்டுள்ள இப்பள்ளிக் கட்டத்திற்கு தமிழ்நாடு பொது

கட்டிடங்கள் (உரிமம்) சட்டம் 1965 பிரிவு 2(8)ன்படி முறையாக புதுப்பிக்கப்படவில்லை என்றும் கட்டங்களை அளவை குறைத்து சொத்துவரி செலுத்து வருவதால் பேரூராட்சிக்கு பெரும் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது. இப்பள்ளியில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் ஊழியர்களுக்கு தொழில்வரி முறையாக செலுத்தாததால் பேரூராட்சிக்கு வருவாய் இழப்பு ஏற்பட்டு இருக்கிறது என்றும் எனவே முறையாக அனுமதி பெறாமலும் சட்டத்துக்கு புறம்பாக செயல்படும் பரவை கற்பகம் மெட்ரிக் மேல்நிலை பள்ளியை நகர் ஊரமைப்பு சட்டம் 1971 பிரிவுகள் 56 மற்றும் 57ன் கீழ் கட்டிட வளாகத்தையும் பூட்டுதல் மற்றும் முத்திரையிட்டும் (Lock and seal) மற்றும் அமலாக்க நடவடிக்கையும் மேற்கொண்டு விரைவாக இப்பள்ளி கட்டிடத்தை சீல்வைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டுள்ளார்.

பரவை பேரூராட்சி செயல் அலுவலர் தனது வாக்குமூலம் மற்றும் அறிக்கையில் மதுரை மாவட்டம், பரவை பேரூராட்சியில் கற்பகம் மெட்ரிக் மேல்நிலை பள்ளி இயங்கி வருகிறது. அப்பள்ளி இந்து அறநிலையத்துறைக்கு சொந்தமான இடத்தில் அமைந்துள்ளது என செயல் அலுவலர் தெரிவித்துள்ளார். பள்ளிக்கான கட்டட அனுமதி 13.3.2012ல் பெறப்பட்டுள்ளது. மேற்கண்ட பள்ளி 2015–2016 முதல் 2022–2023ம் ஆண்டு வரையிலான சொத்துவரியை இன்னும் செலுத்தவில்லை.

எனவே, தரைதளம், முதல் தளம் மற்றும் இரண்டாம் தளத்திற்கான மொத்த சொத்து வரி ரூ.3,32,540/– செலுத்திட நோட்டீஸ் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அப்பள்ளியில் பணியாற்றும் பணியாளர்களுக்கான தொழில் வரியை வசூல் செய்திடவும் பேரூராட்சியில் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என தெரிவித்துள்ளார்.

**விசாரணைக்குப்பின் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்றம் கீழ்க்கண்டவாறு ஆணையிடுகிறது.**

பரவை பேரூராட்சியில் கற்பகம் மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி 2012ல் கட்டட வரைபட அனுமதி பெற்று கட்டப்பட்டுள்ளது. மேற்படி பள்ளி கட்டடம் கட்டி 10 ஆண்டுகள் ஆகியும் சொத்துவரி மற்றும் அங்கு பணிபுரியும் பணியாளர்களின் தொழில்வரியும் வசூலிக்க எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்காதது கடும் கண்டனத்துக்குரியது. இது பேரூராட்சி பணியாளர்களின் அலட்சியப் போக்கு மற்றும் மெத்தனப் போக்கை காட்டுகிறது. பேரூராட்சியின் உபவிதிகளின்படி (Bylaws) மேற்கண்ட பள்ளி கட்டத்திற்கு சொத்துவரி மற்றும் தொழில்வரி கட்டாத பள்ளி கட்டிடத்திற்கு விதிகளின்படி அபராதம் (Fine) விதிக்க நடவடிக்கை எடுக்கவும் இம்முறைமன்றம் பரவை பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடுகிறது.

கற்பகம் மெட்ரிக் மேல்நிலை பள்ளியின் சொத்துவரி மற்றும் தொழில் வரி வசூலிக்காமல் இருந்தமைக்கும் பொறுப்பான அனைத்து அலுவலர்கள் மீது கடும் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும் அதன் விபரத்தை இம்முறை மன்றத்திற்கு தெரிவிக்கவும் பேரூராட்சிகளின் ஆணையர் அறிவுறுத்தப்படுகிறார்.

The Commissioner, Town Panchayats is directed to verify whether the Building Plan of the Karpagam Matric Higher Secondary School has been approved by the designated authority and if so whether the structure is in accordance with the same. If violations and deviations are noticed, necessary action as per the rules in vogue should be launched forthwith. The Engineering Wing of the Directorate of Town Panchayats may be instructed to do measurements and verification in the issue.

Property Tax and Professional Tax should be collected forthwith for all the years since the inception of the school. It is shocking to notice that the Local Town Panchayat officials have been taking this casually and no seriousness has been shown to ensure the receipt of this Revenue for so many years. The Executive Officers responsible for this grave omission and lapse besides betraying complicity and the area Assistant

Directors of Town Panchayat who defaulted in reviewing this vital item of loss of revenue to the Town Panchayat should be identified and charge sheeted unsparingly.

This kind of maladministration of the area Town Panchayat is also taken to the notice of the Additional Chief Secretary to Government, Municipal Administration and Water Supply Department for information and necessary remedial action.

2022-ஆம் ஆண்டு நவம்பர் திங்கள் 29-ஆம் நாள் என்னால் கையொப்பமிட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

//ஒப்பம்//

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

பெறுநர்

1. திரு.R.மயில்சாமி,
த/பெ. இராமலிங்கம்,
5,அய்யப்பன் தெரு, செம்பருத்தி நகர்,
புதுவிளாங்குடி. மதுரை – 625 018.

2. செயல் அலுவலர்,
பரவை தேர்வுநிலை பேரூராட்சி,
மதுரை மாவட்டம்.

3. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
மதுரை மாவட்டம்.

4. பேரூராட்சிகளின் ஆணையாளர்,
பேரூராட்சிகளின் ஆணையரகம்,
நகர் நிர்வாக அலுவலகம்,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி நகர், சென்னை–28.

5. இணை இயக்குநர் (பொது) மற்றும்
ஒருங்கிணைப்பு அலுவலர் (Nodal Officer)
பேரூராட்சிகளின் ஆணையாளர் அலுவலகம்,
நகர் நிர்வாக அலுவலகம், இராஜா அண்ணாமலைபுரம்,
சென்னை–600 028. (பெயரிடப்பட்ட உறையில்)

நகல்

மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்.

இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளருக்காக.